சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

# Case No. OS.125/2023

2024ம் ஆண்டு ஜூன் மாதம் 14ம் நாள் வெள்ளிக்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய **வா.சா.2**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.வெ.லட்சமி, எழுத்தர்நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில நீதிபதியின முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சேகர் | தொழில் | ஆவண எழுத்தரின் உதவியாளர் |
| தந்தை பெயர் | ராமன் | ஜாதி | |
| கிராமம் | அடையபுலம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**14.06.2024** முதல் விசாரணை

நான்ஆவண எழுத்தரின் உதவியாளராக பணி புரிகிறேன். நான் இவ்வழக்கின் வாதிதரப்பு சாட்சி ஆவேன். வாதி, பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த பத்திரம் எழுதியது நான் தான். கிரய ஒப்பந்த பத்திரத்தில் எழுதியவர் என்று போட்டுள்ள கையெழுத்து என்னுடையது தான். வா.சா.ஆ.1ல் உள்ள என் கையெழுத்து **வா.சா.ஆ.21**ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பணை வரப்பெற்றதா என்றால் வரப்பெற்றது.